# தொழிற் கூட்டமைப்பு மாநாட்டில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

முதல் பக்கத் தொடர்ச்சி

1 டிரில்லியன் பொருளாதார மாநிலமாக உயர்த்திட ஒரு உயரிய இலக்கு நிர்ணயித்து, அந்தப் பாதையில் பயணித்து வருகிறோம்.

பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி! சமூகநீதியை உள்ளடக்கிய வளர்ச்சி! பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமத்துவம் போன்ற கொள்கைகளை அடித்தளமாக கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை எங்களுடைய இலக்காக கொண்டிருக்கிறோம்! இதனால்தான், தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து தனித்து விளங்குகிறது!

நம்முடைய தமிழ்நாடு, நகர்ப்புற மக்கள்தொகை அதிகம் கொண்ட மிகவும் நகரமயமாக்கப்பட்ட மாநிலம் மட்டுமல்ல, மிகவும் தொழில் மயமாக்கப்பட்ட மாநிலம்! இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள், தமிழ்நாட்டில் தான் இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் சீரான மற்றும் பரவலான வளர்ச்சியை கொண்டுவர நாங்கள் எடுத்து வரும் முயற்சிகள் பலன் அளித்து வருகிறது. கோயம்புத்தூர், திருச்சி, ஓசூர், மதுரை, சேலம், தூத்துக்குடி போன்ற நகரங்களும் பொருளாதார சக்திகளாக உருவெடுத்திருக்கிறது.

**மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம்!**

நேற்று முன்தினம்கூட, நம்முடைய வளர்ச்சியை எடுத்துக்காட்டுவது போன்ற செய்திகளை நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்தியாவின் மொத்த மின்னணு பொருட்கள் ஏற்றுமதியில் 37.1 விழுக்காட்டோடு தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. அதுவும் கடந்த 11 மாதங்களில் 12.6 பில்லியன் டாலர் மதிப்புள்ள மின்னணு பொருட்களை ஏற்றுமதி செய்து புதிய உச்சத்தை தொட்டிருக்கிறோம்.

உலகின் முன்னணி நிறுவனங்களான, ஃபாக்ஸ்கான், வின்ஃபாஸ்ட், செம்ப்கார்ப், கார்னிங் தங்கள் உற்பத்தித் திட்டங்களை தமிழ்நாட்டில் தொடங்க முன்வந்திருப்பதே, இதற்கு ஒரு சான்று!

அதுமட்டுமல்ல, நிலைத்தன்மை நடவடிக்கைகள் மேற்கொள்வதில், தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது. சென்னையை சுற்றியிருக்கும் தொழிற்சாலைகளுக்கு, TTRO முறையில், தண்ணீர் வழங்கப்படுகிறது. மேலும் பசுமை திட்டங்களை ஊக்குவிக்க, தமிழ்நாடு தொழில் கொள்கை 2021ன்படி பசுமை ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

தொழில் துறைக்கு மேலும் வலுசேர்க்கும் விதமாக, பல்வேறு திட்டங்களை, இந்தாண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறோம். அதில் சிலவற்றை மட்டும் நான் சொல்ல வேண்டும் என்றால்,

**தொழில்துறைக்கு வலுசேர்க்க மேலும் திட்டங்கள்!**

- 500 கோடி ரூபாயில் தமிழ்நாடு செமிகண்டக்டர் மிஷன்
- சூலூர் மற்றும் பல்லடத்தில் தலா 100 ஏக்கர் பரப்பளவில், செமிகண்டக்டர் உற்பத்திப் பூங்கா
- சென்னைக்கு அருகில் உலகளாவிய நகரம் என்று பல அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறோம்.

தமிழ்நாடு அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு இடையிலான நட்புறவை தொடர்ந்து வலுப்படுத்துவேன் என்று இந்த நிகழ்ச்சியில் நான் உறுதியாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நகர்ப்புற உள்கட்டமைப்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் வாழ்க்கைத் தர முயற்சிகளை முன்னெடுப்பதிலும் இந்த ஒத்துழைப்பு தொடரும்.

பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் நகரங்களுக்கு இந்த வளர்ச்சியோடு மக்கள் வாழ எல்லா வகையிலும் ஏற்றதாக இருக்க வேண்டும். மக்களின் மகிழ்ச்சி, ஆரோக்கியம் மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில் நகரங்கள் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட வேண்டும்.

> **“பொருளாதார வளர்ச்சி மட்டுமல்ல; எல்லோரையும் உள்ளடக்கிய வளர்ச்சி! சமூகநீதியை உள்ளடக்கிய வளர்ச்சி! பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமத்துவம் போன்ற கொள்கைகளை அடித்தளமாக கொண்ட ஒட்டுமொத்த வளர்ச்சியை எங்களுடைய இலக்காக கொண்டிருக்கிறோம்! இதனால்தான், தமிழ்நாடு மற்ற மாநிலங்களிலிருந்து தனித்து விளங்குகிறது!”**

**உலகத் தரத்தில் சென்னை மாநகரம்!**

சென்னையை ஒரு உலக தரத்திலான நகரமாக உருவாக்க, மூன்றாவது முழுமைத் திட்டத்தை (3rd Master Plan) தயாரித்துக்கொண்டு வருகிறோம்.

மாநில அரசு சார்பாக கோயம்புத்தூர், மதுரை, ஓசூர், சேலம், திருப்பூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், திருநெல்வேலி உள்ளிட்ட 136 நகரங்களுக்கு முழுமைத் திட்டங்களை (Master Plan) உருவாக்கிக்கொண்டு இருக்கிறோம். இதன் மூலம் நகர விரிவாக்கங்கள் நடைபெறும்போது மக்களின் வாழ்க்கைத் தரம் மிகவும் மேம்படும்.

பசுமை இயக்கத்திற்கு முன்னோடியாக தமிழ்நாடு செயல்படுகிறது. நம்முடைய மின்வாகனக் கொள்கை மாநிலத்தை E.V. உற்பத்தியின் மையமாக மாற்றி இருக்கிறது. ஓலா, வின்ஃபாஸ்ட், டாடா மோட்டார்ஸ் போன்ற நிறுவனங்கள், தங்களின் திட்டங் களை நம்முடைய மாநிலத்தில் நிறுவியிருக்கிறார்கள். மேலும், பசுமை ஹைட்ரஜன் திட்டங்களிலும் முக்கிய முதலீடுகள் செய்யப்பட்டிருக்கிறது. உலகளாவிய முன்னோடிகளுடன் இணைந்து, தூய்மையான ஆற்றலில் அடுத்த தலைமுறை தீர்வுகளை உருவாக்க தமிழ்நாடு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**நகர்ப்புற வெள்ளத்தை தகர்க்க நடவடிக்கை!**

நகர்ப்புற நிலைத்தன்மைக்கு நீர் பாதுகாப்பும் கழிவு மேலாண்மையும் மிகவும் முக்கியம். இதைக் கருத்தில் கொண்டுதான், தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு நீர் பாதுகாப்பு திட்டம் மூலம் மழைநீர் சேகரிப்பு, ஏரிகள் புதுப்பித்தல், மற்றும் நீர்வளங்களை திறம்பட நிர்வகித்தல் போன்ற நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகிறோம். திடக்கழிவு மேலாண்மை மற்றும் சர்க்குலர் எக்கானமி ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கி, சுற்றுச் சூழலைப் பேணி பாதுகாக்க மறுசுழற்சி மற்றும் கழிவுகளை ஆற்றலாக மாற்றும் திட்டங்கள் ஊக்குவிக்கப்படுகிறது. கழிவு நீர் வடிகால் அமைப்புகள் மேம்படுத்தப்பட்டு, நகர்ப்புற வெள்ளத்தைக் கட்டுப்படுத்தவும், சுற்றுச்சூழலைப் பேணவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கம் மூலமாக, நிலைத்தன்மை கொண்ட வாழ்விடங்களை ஊக்குவித்து, கார்பன் பயன்பாட்டை குறைத்து, காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ள நினைக்கிறோம். நகரங்களை வாழ்வதற்கு ஏற்றதாகவும் நிலைத்தன்மை கொண்டதாகவும் மாற்றுவது சமூகப் பொறுப்பாக மட்டுமல்லாமல், இது உங்களுக்கெல்லாம் ஒரு பொருளாதார வாய்ப்பாகவும் இருக்கும். எனவே, மின்சார போக்குவரத்து, நிலையான கட்டுமானம் மற்றும் தூய்மையான தொழில்நுட்பம் போன்ற பசுமை பொருளாதாரத் துறைகளில் தமிழ்நாட்டில் முதலீடு செய்யுமாறு உங்களை இந்தத் தருணத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

புத்தாக்கமான ஸ்மார்ட் நகர தீர்வுகள், ஆற்றல் செயல்திறன் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற திட்டங்களில் எங்களுடன் இணைந்து செயல்படுங்கள் என்று உங்களுக்கு நான் இந்த நேரத்தில் அழைப்பு விடுக்கிறேன்.

வாழ்வதற்கேற்ற, நிலைத்தன்மை கொண்ட மற்றும் செழிப்பு நிறைந்த நகரங்களை உருவாக்குவதுதான், நம் எல்லோருடைய இலக்கு!

**எதிர்காலத் தலைமுறையின் நலனை பாதுகாப்போம்!**

தமிழ்நாடு அரசு, உங்களுடனும், தொழில் துறையுடனும் இணைந்து உலகத் தரத்திற்கேற்ப உள்கட்டமைப்புகளை உருவாக்க உறுதிபூண்டிருக்கிறது. இது பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதோடு, எதிர்கால தலைமுறையின் நலனையும் பாதுகாக்கும்.

வளர்ச்சியும் நிலைத்தன்மையும் ஒன்றிணையும் இந்த மாற்றம் நிறைந்த பயணத்தில், தமிழ்நாடு உங்களை அன்புடன் வரவேற்கிறது என்று உங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாநாடு வெற்றியடைய என்னோட வாழ்த்துகள்!

தமிழ்நாட்டை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடக் கூடாது. மற்ற வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். வளர்ச்சியில் பெரும் பாய்ச்சலை நிகழ்த்திக்கொண்டு இருக்கும் நம்முடைய தமிழ்நாட்டுக்கு உங்களோடு தொடர்பில் இருக்கும் முதலீட்டாளர்களை நீங்கள் அழைத்துக்கொண்டு வர வேண்டும்.

நம் நகரங்கள் உலகளவில் போட்டி போடக் கூடியவைகளாக மட்டுமல்லாமல், இன்றைக்கு வாழ்வதற்கேற்ற, நிலையான மற்றும் அனைவருக்குமானதாக இருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய உயரிய நோக்கம். அந்த இலக்கை அடைந்திட ஒன்றாக முன்னேறுவோம் வாருங்கள் என்று உங்களை அன்புடன் கேட்டு, விடைபெறுகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

பெரம்பலூருக்கு என்று தனியாக ரூ. 334 கோடியில் கூட்டுக் குடிநீர் திட்டம்!

## பெரம்பலூரில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் விரைவில் முடிவடையும்!

### சட்டப் பேரவையில் - அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

*சென்னை,மார்ச்.29-*

சட்டப் பேரவையில் நேற்று, பெரம்பலூர் தொகுதி கழக உறுப்பினர் ம.பிரபாகரன் விடுத்த வினாவிற்கு பதிலளித்த நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, “பெரம்பலூரில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் விரைந்து நிறைவுற்று சாலைகள் சீரமைத்துத் தரப்படும்” என அறிவித்தார்.



**ம.பிரபாகரன்:** பெரம்பலூர் நகராட்சியை, மாநகராட்சியாக தரம் உயர்த்தப்படும் என்று அறிவித்த, முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் அண்ணன் ராசா அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நமது நாடாளுமன்ற உறுப்பினர் அருண் நேரு அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரம்பலூர் நகராட்சி கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு, கழக அரசால் அறிவிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டமானது, தற்போது நகரப்பகுதி 3 மடங்காக விரிவடைந்துள்ளது.

எனவே அனைத்துத் தரப்பு மக்களும், பயன்படுத்த முடியாத நிலையில் பாதாள சாக்கடைத் திட்டம் உள்ளது. எனவே, பெரம்பலூர் நகராட்சிக்கு புதிய பாதாள சாக்கடைத் திட்டம் நிலை II என்று அறிவித்து, இந்த பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த அரசு முன்வருமா ?

**அமைச்சர் கே.என். நேரு:** முதலில் 1991 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில்தான் லால்குடியில் கொள்ளிடம் நீராதாரத்தைக் கொண்டு, நமது பெரம்பலூருக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தரப்பட்டது. அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம், இப்போது புதிதாக நமது தளபதி அவர்கள் வந்து, பெரம்பலூருக்கு என்று தனியாக 334 கோடி ரூபாயில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

இப்போது மாநகராட்சியாக மாற்றப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பது தொடர்ந்து நான்கு ஆண்டு காலமாக நடைப்பெற்று வருகிறது. விரிவுப்படுத்தப்பட்டப் பகுதிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டம் வேண்டுமென்று சொல்லியிருக்கி றார்கள்.

எனவே, அந்தப் பணிகள் தொடர்ந்து நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொன்னது போல விரைந்து அதை முடித்து, சாலைகள் சீரமைத்துத்தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில்

## கீழ்கட்டளையில் மாபெரும் மருத்துவ முகாம் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைக்கிறார்!

### இ.கருணாநிதி - எஸ்.ஆர்.ராஜா பங்கேற்பு! இ.எஸ்.பெர்னாட் தலைமை!

*பல்லாவரம், மார்ச்.29-*

பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாளை யொட்டி 30ஆம் தேதி நடைபெறும் மாபெரும் மருத்துவ முகாமை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைக்கிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா ஆகியோர் பங்கேற்று சிறப்பிக்கும் இந்த நிகழ்ச்சிக்கு பகுதி செயலாளர் இ. எஸ்.பெர்னாட் தலைமை வகிக்கிறார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில், முதல்வர் கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளையொட்டி, கீழ்கட்டளை கலைவாணி தெருவில் அமைந்துள்ள ஆலமரப் பள்ளி அருகில் மாபெரும் இலவச பொது மருத்துவ முகாம் பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னாட் தலைமை நடைபெறுகிறது.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்துகொண்டு இம்மாபெரும் மருத்துவ முகாமை தொடங்கி வைக்கிறார்.

பல்லாவரம் தெற்கு பகுதி கழக அவைத் தலைவர் வை.தா.ர.மூர்த்தி, பகுதி துணைச் செயலாளர்கள் வி. கர்ணல், இ.வெங்கடேசன், பி. மீனா, பகுதி பொருளாளர் ஆர்.செந்தில்குமார் மாநகர பிரதிநிதிகள் ஜெ.சுரேஷ் குமார், பி.ராமகிருஷ்ணன், ஏ. சூசைராஜ், அ.ராமச்சந்திரராஜா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

20வது வார்டு செயலாளர் எம்.முருகையன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

சட்டமன்ற உறுப்பினர்கள் பல்லாவரம் இ.கருணாநிதி, தாம்பரம் எஸ்.ஆர்.ராஜா, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதி கழக செயலாளர்கள் இ. ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே. கருணாகரன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன், பொதுக்குழு உறுப்பினர் மு.ரஞ்சன், மாவட்டப் பிரதிநிதிகள் த.ராஜாராமன், கி.தனசேகரன், குளத்துமேடு நாகலிங்கம், க.ரமேஷ், மாவட்ட கழக அணிகள் துணை அமைப்பாளர்கள்வெ.தாமோதரன், ஜி.ஜெகன்நாதன், கோ. ஜானகிராமன், ஜெ. இன்சமாம், என்.எஸ்.கண்ணன் மற்றும் ம.கமல்ராஜ், எஸ்.மணிரத்தினம், வி.ஆதிலட்சுமி,

வட்டச் செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் வி.என்.சிலம்பரசன், பி.வெங்கடேசன், ஆர்.கே.நாகராஜன், சா.முஜிபூர் ரகுமான், டி.கன்னியப்பன், ஆர். காமேஸ்வரன், பிருந்தாதேவி சிலம்பரசன், கலைச்செல்வி வெங்கடேசன், கீதா நாகராஜன், மகேஸ்வரி கார்த்திகேயன், டி.கே.கார்த்திகேயன் உள்ளிட்ட ஏராளமான கழகத்தினர் இந்த முகாமில் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் மாநகரப் பிரநிதி டி.எல்.பார்த்திபன் நன்றி கூருகிறார்.

இம்மருத்துவ முகாமிற்கான ஏற்பாடுகளை பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னாட் முன்னின்று செய்து வருகிறார்.

---

அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலை! எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையில்

## சைதை மேற்குப் பகுதி தி.மு.க. சார்பில் முதல்வர் பிறந்தநாள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் தங்கம் தென்னரசு - இயக்குநர் கரு.பழனியப்பன் சிறப்புரை!

*சென்னை, மார்ச் 29-*

சென்னை தெற்கு மாவட்டம் சைதை மேற்கு பகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு 01.04.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை தேரடி திடலில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், 10வது மண்டலக்குழுத் தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி தலைமையிலும், சைதை கிழக்குப் பகுதி கழக செயலாளரும் 13வது மண்டலக்குழுத் தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், பகுதி கழக நிர்வாகிகள் களக்காடி எல்லப்பன், த.சம்பத், ஆர். ரமேஷ், கவிதாகௌதமன், வி.பி.ஜானகிராமன், வட்ட கழக செயலாளர்கள் சை.மு. சேகர், ந.தமிழரசு, அட்கோ கமலநாதன் ஆகியோர் வரவேற்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு நிதி - சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் ச.அரவிந்த்ரமேஷ், காரப்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், க.தனசேகரன், பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், காசிமுத்து மாணிக்கம், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ். பாஸ்கர், வாசுகிபாண்டியன்,

பகுதி கழக செயலாளர்கள் - ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கண்ணன், மு. இராசா, எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், சு. சேகர், துரைகபிலன், நொளம்பூர் வே.ராஜன், கோவிலம்பபாக்கம் வெங்கடேசன், அ.ம.துரைவீரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.ஹரிபாபு, ரத்னாலோகேஸ்வரன், மின்னல் கந்தப்பன், மேடவாக்கம் ப.ரவி, எம்.கே.ஏழுமலை, உ.துரைராஜ், எஸ். டி.தங்கராஜ், பி.எஸ்.முருகேசன், எஸ்.அரிகிருஷ்ணன், ரா.பாலசுந்தரம், பி.ஜே. பாஸ்கர், வ.செல்வகுமார், த.பஷீர், வீர.கனிமொழி, மாவட்ட அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ.பாஸ்கரன், ப.அருண்குமார், வே.ஆனந்தம், சி. பரிமேலழகர்,

த.ரமேஷ்,ம.பார்த்திபன், சி.சுரேஷ், எம்.ஆர்.சசிகுமார், குமரேசன், வி. ராஜேஷ், கனிமொழி தனசேகரன், நிஷாசையத், ஜெகதீசன், டாக்டர் அனிஷ், முகேஷ்கண்ணன், வி.ஜெயச்சந்திரன், எஸ்.பி.அருள், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ணகுமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், எம்.விநாயகமூர்த்தி, சங்கர்கணேஷ், ஜெ.இ.பாண்டியன், தியாகராஜன், செ.ரவி, சைதை கிழக்கு பகுதி நிர்வாகிகள் - வட்ட கழக செயலாளர்கள் இ.முருகேசன், ஆர். ராஜ்குமார், மு.ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு. பாக்கியலட்சுமி, தா. மோகன்குமார், நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், கோட்டூர் க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேருநகர் எஸ்.பாட்சா, எஸ். ஆர்.செந்தில், ஆ.வரதன்,

மாவட்ட பிரதிநிதிகள் கு.புகழ்வேந்தன், டி.என். சிவமணி, பால்கார் ரவி, பொன்ஜெய்சிங், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், ஆர்.ரவி, ஜி.பாபு, டி.வி.நரசிம்மன், வே.முருகன், எஸ்.சேகர், என்.நந்தகோபால், எஸ்.ராதாகிருஷ்ணன், இரா.சுதாபிரியன், ந.பாபு, மு.மகேஷ், எஸ். கணேசன், ஜி.செல்வராஜ், வே.ரமேஷ்குமார், ஏ.மஜித், எஸ்.ரவி, தலைமை கழக பேச்சாளர்கள் ஒப்பில்லாமணி, ஏ.எஸ்.பழனி, ஈகை தனசேகரன், ஆட்டோ பாஸ்கர், மு.அஜிம், இளைஞர் அணி நிர்வாகிகள் ஜிம் பிரபு, ம.சுகுமார், க.தீபன், இரா.சத்யா, இரா.வெங்கடேசன், கொடி பாலா, மே.குணா, தி.கோகுலன், ப.அருண்குமார், கோ. ராஜன், ராஜாசம்பத்,

அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.சந்தோஷ், டி.எஸ்.ரவிச்சந்திரன், என். சம்மந்தம், ஆட்டோ தியாகு, கார்த்திகேயன், மாவுமில் ஸ்ரீதர், கேபிள் காளி, தீ.ராஜ்குமார், த. மணி, கே.தாஸ், தீனதயாளன், தமீம்அன்சாரி, வெ. புருஷோத்தமன், ச.தினகர், ஆர்ட்ஸ்குமார், எம்.மாறன், கே.பிரபு, பிரஸ்கார்த்திக், வெ.கிஷோர்குமார், ஆர். துரைராஜ், சிற்றரசு, நரேஷ் குமார், ரவீந்திரகுமார், ஆர். ஜி.ஸ்டாலின், எம்.ஜி.மதிவாணன், தமிழ்வேல், ஸ்டெல்லாமேரி, செல்வி, ராஜேஸ்வரி, செண்பகம், சுந்தரி, செல்வராணி,

அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் ஆர்.எஸ். ரமேஷ், ஜி.ஜே.மோசஸ், ஆர்.ஜி.கற்பகம், எல்.கார்த்திக், எஸ்.மல்லிகா, கோயில் மணி, ஆட்டோ ஜான், தனசேகரன், சார்ப்சரவணன், வைரவமூர்த்தி, இரா.பாபு, பிடிசி குமார், பூ.பாஸ்கர், த.ஜெயராமன், கோகுல்குமார், மாரியப்பன், விவேக் செல்வம், மருத்துவர்கள் துரைராஜ், ஜீவாபிரபாகரன், உள்ளிட்ட வட்டகழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், பாகபொறுப்பாளர்கள், பாக களப்பணியாளர்கள், கழக முன்னோடிகள், ஆகியோர் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

கூட்டத்தின் நிறைவாக 142 “அ” வட்ட கழக செயலாளர் எஸ்.பி.கோதண்டம், 142 வட்ட கழக செயலாளர் எம்.நாகா ஆகியோர் நன்றி கூற உள்ளனர்.

---

கடலூர் கிழக்கு மாவட்டக் கழக – பொறியாளர் அணிக்கு

## ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகப் பொறுப்புகளுக்கு நேர்காணல்!

### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

*கடலூர், மார்ச் 29-*

கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க பொறியாளர் அணிக்கு ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் பொறுப்புக்கு QR CODE மூலம் விண்ணப்பம் செய்தவர்களுக்கு நேர்காணல், இன்று (29.03.2025 - சனிக்கிழமை), பகல் 2.00 மணி அளவில், சிதம்பரம் தெற்கு வீதி அறுபத்து மூவர் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.



மாநில பொறியாளர் அணி தலைவர் துரை.கி.சரவணன், கழக பொறியாளர் அணி துணை செயலாளர், கடலூர் மண்டல பொறுப்பாளர் சி.பிரதிப் ஆகியோர் முன்னிலையில் நேர்காணல் நடைபெற உள்ளது.

ஆகவே மேற்கண்ட பொறுப்பிற்கு QR CODE மூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் QR CODE மூலம் விண்ணப்பம் செய்தவர்கள் மட்டும் கலந்து கொள்வதற்கு உரிய ஏற்பாடு செய்து, தாங்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர், மாவட்டச் செயலாளர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் கேட்டுக்கொண்டுள்ளார்.

